Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்
EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 30

## சங்ககால தமிழிசை மரபில் பண்கள்

***தங்கராசா வாகீசன்***

*விரிவுரையாளர்,*

*சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்,*

*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

### *முன்னுரை*

உலக தொடக்கத்தை முதலில் கணிக்கும் சங்ககாலத்தை கி.பி. 01 - 03 நூற்றாண்டாக வகைப்படுத்துகி;ன்றான் நம் சான்றோன். அவன் வாழ்ந்து வளர்த்த பண்டைய தமிழ் இன்னும் சிறப்புடன் இருக்க காரணம் அதனுள் இருக்கும் இசையே. இசை ராகங்களால் உருவானது ராகத்தின் அடித்தளமே பண் ஆகும்.

"பண் என்பது பாடல்களில் அமைந்துள்ள இசையின் முறை நிலை" ஆகும் பண் என்பதற்கு அமைவு, சீர், தகுதி, நிந்தை, வீணை, ஊழியம், படுகுழி, மகளிர்கூட்டம் என பல பொருள்கள் அகராதியில் தரப்பட்டிருந்தாலும் "ஒலியானது செம்மையான முறையில் பாடலில் பொருந்தியுள்ள நுட்ப உணர்வால் அடையாளம் காணத்தக்க நிலையில் ஒலியுருவங்களாக அமைவதே" பண் ஆகும்.

இவ்வாய்வு கட்டுரை எழுதுவதன் நோக்கமானது சங்க பாடல்களில் எவ்வகையான பண்கள் எந்த சூழலில் மக்களின் வாழ்வியலோடு இணைந்து காணப்பட்டது என்பதையும் எவ்வாறு இசை தோன்றினாலும் அனைத்து இசை வகைகளிற்கும் தாய் இசையானது தமிழ் இசை என்பதனையும் கட்டுவதுடன் தமிழ் இசையின் ஆணிவேர் பண்கள் என்பதை தற்கால சமூகத்தினருக்கு எடுத்து இயம்பும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

## சங்ககாலப் பண்கள்

"இனிமையான இசை தொடர்புடைய ஒலி உருவ அமைப்பை பண் என்று கூறலாம்." பண்டைய தமிழ் மக்கள் பண்களைப்பற்றி எந்த அளவிற்கு அறிந்துள்ளனர் என்பதற்கு சங்க இலக்கியங்களே சான்றாகும்.

பண்டைய தமிழன் இசைக்கருவி, மிடற்றுக்கருவி மட்டும்மில்லாது அன்றாடம் அவனின்தொழிலுக்காக உபயோகிக்கும் பொருட்களின் உரசலினால் ஏற்பட்ட இசையையும் உணர்ந்திருந்தான்.

## எட்டுத்தொகை நூல்களில் பண்கள் பஞ்சுரம்

பஞ்சுரம் என்ற பண் குறிஞ்சி அல்லது பாலையை சார்ந்த இரண்டாம் தரப்பண்களாக கருதப்படுகின்றது. இப்பண்கள் அச்சத்தை பெருக்கும் இயல்பு கொண்டதாக இருக்கவேண்டும். ஏனெனில் ஐங்குறு நூற்றிலுள்ள ஒரு பாடல் இதற்கு சான்றாக அமைகின்றது.

"வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினும்
ஆரிடை செல்வோர் ஆறுநனி வெரூ உம்
காடிறந் தனரே காதலர்" (ஐங்குறு நூறு 311: 1-3)

குறிஞ்சி நிலப்பெண்கள் வேங்கை மலர் பறிக்கும்போது திறனை மயக்கம் காட்டுவதாகப் பஞ்சுரம் பாடுவதைக் கேட்டதும் வழி நடப்போர் பாரில நிலம் வந்ததாகக் கருதி அச்சங்கொள்வர். இதைப் இப்பாடல் கூறுவதை காணின் பண்ணுக்கு அச்சஉணர்வு ஊட்டும் ஆற்றல் இருப்பதாக அறியலாம். பஞ்சுரம் தற்காலத்தில் பாடப்படும் சங்கராபரணம் என்னும் தமிழ்ச்சங்கம் ஒரு முடிவு தருகின்றது. ஆனால் சங்கராபரணம் அச்சமூட்டும் என கூறமுடியாது இன்னும் சிந்திக்கவேண்டிய பழமைப்பண்ணாக பஞ்சுரம் உள்ளது.

## பாலைப்பண்

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப் பெற்றுள்ள பண்களில் மிகச் சிறப்பானதும் புகழைக் கொண்டதுமானது பாலைப்பண் என்றால் மிகையாகாது இது நண்பகல்பாட ஏற்றபண் எனலாம் உரையாசிரியர் செம்பாலை என பாலைப்பிரிவுகளாக குறிப்பிட்டு அக்காலத்தில் வழக்கில் இருந்ததாக குறிப்பிடப்படுகின்றார். ( தமிழர் இசைப் பக்கம் 7;5)

"புரிநரம் பின் கொளைப் புகல் பாலை ஏழும்" (பரிபாடல். 7:77)

பதிற்றுப்பத்து பாலைப்பண்ணை 4 பாடல்களில் குறிப்பிடப்படுகின்றது அங்கு முதல் உரையில் பாலைப்பண் அழுகைச் சுவை கொண்டதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் பின்வந்த பதிற்றுப்பத்துப் பாடல்களில் இன்பத்தை

தருவதாக கூறப்படுகின்றது. ஆனால் அழுகைச் சுவை இருந்திருக்க வாய்ப்பு இல்லை என்றும், இன்பச்சுவை பாலைப்பண்ணினால் கொடுக்கக்முடியும் என்றும் கூறப்படுகிறது.

"வாங்கிட மருப்பில் நீத்தொடைபழனிய
இடறுடைய் பேரியாழ் பாலை பண்ணிப்
படர்ந்தனை செல்லு முதுவாயிரவல" (பதிற்றுப்பத்து 66; 1-3)

என்ற ஆற்றுப்படைப்பாடலில் ஓர் இரவலனை அழுகைப் பண் பாடிப் புரவலனிடம் செல் என்று கூறியிருக்கமாட்டார்கள் இனிய இசையுடைய பேரியாழ் கொண்டு ஓர் இன்பப் பண்ணைத்தான் இசைக்காக கூறியிருப்பார்கள் பாலைப்பண் இனிமையான இன்பயிசை கொண்ட பண்ணாக இருக்கவேண்டும் என்று கருதுவதே சிறந்தது.

## செவ்வழிப்பண்

செவ்வழிப்பண் முல்லை, நெய்தல் என்பவற்றுக்குரிய இசைக்கூறு ஆகும். இது மாலை நேரத்திற்கு உரியது. இசைநூல் மரபுப்படி மாலையில் செவ்வழியும், காலையில் மருதம் பாடுதல் வேண்டும். முல்லைநிலம் பிரிவுத்துயரையும், நெய்தல் நிலம் இரங்கல் துயரையும் கொண்டவை. இரண்டும் துன்பச்சுவை உடையன. ஆகையால் இவ்விரு நிலங்களிற்கும் உரியதாக கருதப்படும் செவ்வழிப்பண் துன்பஉணர்வை கொண்டதாகவே இருக்கும். மற்றும் அழுகைச்சுவை இப்பண்ணில் அழுத்தம் பெறுகிறது புறநானூற்றில் செவ்வழிப்பற்றிய செய்தி உள்ளது முன்னிரவில் செவ்வழிப்பண் இசைக்கப்படுகின்றது.

"அருளா யாகலோ கொடிதே யிருள்வரச்
சீறியாழின் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினோம் ஆக. "(புறநானூறு 144: 1-3)

## காஞ்சிப்பண்

காஞ்சிப்பண் விழுப்புண்பட்டவர்கள் பேய்ப்பிடி கொண்டவர்கள் வருத்தம் தீர்ப்பதற்காக பாடப்பட்டது என தெரிகிறது அவ்வாறு பாடுதல் சங்ககால வழக்கமாகும்.

## புறநானூற்றில் இக்கருத்து நன்கு விளக்கப்படுகிறது

"ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து காஞ்சிபாடி
நெடுநகர் வரைப்பில் கடிநறை தோழி

வேந்துறு விழமம் தாங்கிய
பூம் பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே” (புறநானூறு.281: 1

ஐவிய சிதறல் புகைத்தல், மணி அடித்தல் முதலிய செயல்கள் பூசனைக்கு உரியவை அத்தோடு ஆம்பல்குழல் ஊதிக் காஞ்சிப்பண்ணைப் பாடியதாகக் குறிப்பிட பெற்றுள்ளது. இதிலிருந்து இப்பண்ணுக்கும் இத்தகைய பூசனைக்கும் தொடர்பு இருப்பதாக தெரிகின்றது. விழுப்புண பட்ட வீரனை காக்கவேண்டி இந்த சடங்கு நடைபெறுகின்றது. மற்றொரு பாடல் இதனை சற்றுவிரிவாக விளக்குகிறது. வேப்பந்தார் கூடுதலாக இதில் கூறப்பட்டுள்ளது.

“வேம்புசினை ஒடிப்பவும் காஞ்சிபாடவும்
நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்
எல்லா மனையும் கல்லெண் றனவே
வெந்துடன் நெறிவாள் சொல்லோ
நெடிதுவந் தன்றான் நெடுந்;தளகதேரே”. (புறநானூறு.296: 1-5

இப்பாடலில் வேப்பந்தழை கொண்டு பேய் விரட்டும் செயல் குறிப்பாக காட்டப்படுகிறது. விழுப்புண்பட்டவர்கள் பேய்கள் அண்டி உயிர்பறிக்க முயலும் என்பது மக்கள் நம்பிக்கை அதைத் தவிர்க்க இவ்வாறு பூசனை முறைகள் கையாளப்படுகின்றன. அப்பொழுது பாடப்பெறும்பண் என்று மக்கள் நம்பியிருக்கவேண்டும் பண்களின் இசைக்கு ஆற்றல் உண்டு என்ற உணர்வு சங்ககாலத்திலிருந்து மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

## விளரிப்பண்

அடுத்ததாக விளரிப்பண்ணை எடுத்து நோக்கும்போது இது இரங்கியழுங்கலைக் குறிக்கும் பண்ணாக குறிப்பிடப்பட்டுள்ளது தலைவியின் இரங்கலும் விளரிப்பண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளதை குறுந்தொகையில் காணலாம்.

சிறுநா வொண்மணி விளரி யார்ப்பக்
கடுமா நெடுந்தேர் நேமி போகிய
இருங்கழி நெய்தல் போல
வருந்தினள் அளயணீ பிரிந்திசிணோளே (குறுந்தொகை: 336:3-6)

அதாவது பிரிவுதுயருற்ற தலைவிக்கு தலைவனின் தேர்மணி ஓசையின் நிறைவு விளரிப்பண்ணாக கேட்கின்றது. அவள் ஆற்றாமல் வருந்துகிறாள் இனி அவன் வரமாட்டான் என்ற அவலநிலை விளரிப்பண் நினைவில் ஊறி மனதை

வாட்டி வதைக்கின்றது. விளரி துன்ப உணர்வையும் வெளிப்படுத்தும் பண்ணாக விளங்குகின்றது சங்கப்பாடல்கள் வாயிலா பண்களை கண்டறிய முடிகின்றது.

## பத்துப்பாட்டு நூல்களில் பண்கள்

## சீகாமரம்

காமரம் என்ற பண்ணைப்பற்றிய செய்தி சிறுபாணாற்றுப்படையில் வருகின்றது. "காமரம் செப்பும்;" என்று கூறப்பட்டுள்ளதை நச்சினார்கிணியர் சீகாமரம் என்னும் பண்ணைப்பாடும் என்று விளக்கி காட்டுகின்றார். இது மருதநில மக்களால் பாடப்படும் ஒருவகையான இரண்டாம் தரமான பண் என்று கூறப்படுகின்றது. இப்பண்ணை தும்பி பாடுவதாகத்தான் சிறுபாணாற்றுப்படையில் சொல்லப்படுகின்றது.

"ஏம வின்றுணை தழிஇ யிறளேர்ந்து

காமரு தும்பி காமரஞ் செப்பும்

தண்பணை தழீஇய தளரா விருக்கை" (சிறுபாணாற்றுப்படை:76-78)

காமறு தும்பி என்று சொல்லி இருப்பதால் இது இன்ப உணர்வை தோற்றும் பண் என்று கருதலாம். மேலும் பாடப்படும் மருதநிலம் காமஉணர்வுக்கு பொருத்தமுடையதாக உள்ளது.

## குறிஞ்சிப்பண்

மலைப்பாங்கான இடங்களில் நள்ளிரவு நேரம் குறிஞ்சிப்பாடுவதாக கூறப்படுகிறது. அவை அச்சம் தரும் இடமும், காலமும் ஆகும்.

"நறுங்கா நடுக்கத்துக் குறிஞ்ச (மலைப்படுகடாம்:359)

என்ற பாடலடி நடுக்கத்துடன் குறிஞ்சிப்பண் பாடுவதை குறிப்பிடுகின்றது. வில் யாழ்; கொண்டு குறிஞ்சிப்பண் பாடும் ஒரு குறிப்பும் கிடைக்கப்பெற்றிருக்கின்றது. "விலயா ழிசைக்கும் விரலறி குறிஞ்சி" (பெரும்பாணாற்றுப்படை:182)

வில்யாழை விரலால் சுண்டி இசை எழுப்பிப் குறிஞ்சிப்பண்ணை பாடுவதாக கூறப்பட்டுள்ளது.

## செவ்வழிப்பண்

செவ்வழிப்பண்ணை யாழ் இசையுடன் முழவு, ஆகுளி, ஆகிய தாள இசைக்கருவிகளுடன் பாடியதையும் காணமுடிகிறது.

"திவவு மெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோடொன்றி

நுண்ணீர் ஆகுளி இரட்டப் பலவுடன்
ஒண்சுடர் விளக்கம் முந்துற மடையொரு"
(மதுரைக்காஞ்சி 604-307) :

## நைவளம்

நைவளம் என்ற பண்ணை இரண்டாம் தரமாகவே கருதுகின்றனர். இப்பண் பாலைப்பண்ணிலிருந்து கிளைத்ததாக கூறப்படுகின்றது.

"நைவளம் பழுநிய பாலை வல்லோன்" (குறிஞ்சி: 146)

என்ற குறிஞ்சிப்பாட்டு அடிக்கு உரைக்கூறும் நாச்சினார்கிணியர் இதனை நட்டராகம் என்று குறிப்பிட்டு உள்ளார். "நட்டராகம் முற்றுப்பெற்ற பாலை யாழை வாசிக்க வல்லவன்". என்பது அவருடைய விளக்கம் இது பகலில் இசைக்க வேண்டிய பண்களில் ஒன்று.

நைவளம் பழுநிய நயந்தெரிபாலை

கைவல் பாண்மகன் கடனறிந்தியங்க (சிறுபாணாற்றுப்படை 36-38)

என்று கூறும் பாடலடிகள் பாணன் நைவளப்பண்ணின் முறையறிந்து இசைத்ததைக் கூறுகிறது இதேபோன்று

"நைவளம் பூத்த நரம்பியைச் சீர்ப்பொய்வளம்பூத்தன பானாநின் பாட்டு" (பரிபாடல்: 18. 20-21)

பாணன் யாழிசையுடன் நைவளம் பாடியதை இப்பரிபாடல் அடிகள் கூறுகின்றது இது மகிழ்வுடன் பாடும் பண்ணாக இருக்கலாம்.

## பாலைப்பண்

பெரும்பாணாற்றுப்படை கூறும் இடம் குரலில் பாலைப்பண் இசைக்கப்படுவதையும் அது இனிமையான இசை உடையது என்பதையும் மிக தெளிவாக காட்டும்.

பொருநாற்றுப்படை பாலைப்பண்ணின் நல்ல ஆற்றலை கூறுவதாக உள்ளது. "ஆறலைக் கள்வர் படைவி - அருளின் மாறுதலைப் பெயர்க்கும் மருவின் பாலை" (பொருநாற்றுப்படை 21-22)

கொலைக்கு அஞ்சாத கள்வரையும் படைவிடுத்து அருள் உணர்வு கொள்ளுமாறு செய்யும் அரியத்தன்மை பாலைக்கு உண்டு என்று இவ்வடிகள் கூறுகின்றன.

## மருதப்பண்

மருத நிலத்துக்கு உரிய மருதப்பண் இன்பச்சுவை ததும்பக் காலையில் பாடும் பண்ணாகும் விடியும் காலம் மருதப்பண் பாடியதாக மதுரைக்காஞ்சி ஒரு குறிப்பைத் தருகிறது.

“சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி யாழோர் மருதம் பண்ண” (மதுரைக்காஞ்சி: 657-658)

இனிமையாக யாழை இயக்கி மங்களமாகக் காலை நேரத்தில் மருதப்பண்ணை இசைத்து மனமகிழ செய்கின்றனர்.

## முடிவுரை

சங்கங்கள் மூலம் தமிழையும், தமிழ் இரையையும் வளர்த்த காலப்பகுதி சங்கக்காலப்பகுதி எனப்படுகிறது. இந்த காலப்பகுதியில் பதினென்மேற்கணக்கு நூல்கள். என அழைக்கப்படும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் பயன்படுத்தப்பட்ட பண்களை பற்றியும் தற்கால இளம் சமூகத்திற்கு தெரிவிக்கும் வகையிலும், பண்கள் இசைக்கும்பொழுது பல சடங்குகளும் இடம் பெற்றிப்பதனையும் அறிய முடிகிறது.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் ஒரே வகையான சில பண்கள் கையாளப்பட்டுள்ளது. என்பதனை உறுதியாக கூறமுடியும். பழந்தமிழர்களது வாழ்வு சடங்கு சம்பிரதாயப் பாடல் இசைத்தல் போன்ற சம்பிரதாயங்களை உள்ளடக்கி இருந்தது மற்றும் எத்தனை இசைவகைமைகள் தோன்றினாலும் அத்தனை இசைவகைகளுக்கு தாய் இசை தமிழ்இசையே இதன் பெருமைகளை சுட்டியும் வகையில் இப்பண்கள் காணப்படுகின்றன. இப்பண்கள் இன்று இராகங்கள் என்ற புதிய பெயரில் காணப்படுகின்றது என்று கூறினால் பொருத்தமானது எனலாம். இந்த ஆம்பல், காஞ்சி, சீகாமரம், குறிஞ்சி. செவ்வழி, நைவளம், பஞ்சுரம், படுமலை, பாலை, மருதம், விளரி, என 11 வகையான பண்கள் காணப்படுகிறது. மனிதன் உணர்ச்சிகளுக்கு உட்பட்டவன். எனவே இந்த பண்களும் அவனது உணர்ச்சிகளின் தன்மைகேற்ப பாடப்பட்டது என்பது சிறப்புமிக்கது எனலாம்.

இறுதியாக கூறுவதாயின் இராகங்களை தோற்றுவாய் பண்கள் ஆகும். பழந்தமிழர்களின் கண்டுபிடிப்புக்களின் தமிழிசையும் ஒன்று. அதில் பண்களே மூலதாரமாக திகழ்ந்தது எனலாம்.